[1987 மார்ச் 3

பரம்பிக்குளம், ஆளியாறு திட்டம்.

38—(*வினா எண் 6887) திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரம்பிக்குளம், ஆளியாறு திட்டத்தின் மூலம் எத்தனை ஹெக்டேர் நிலம் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டது ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம், ஆளியாறு திட்டத்தின் மூலம் 1,15,731 ஹெக்டேர் நிலம் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டது.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு அரசு ஆரம்ப காலம் முதல் தற்போது வரை செலவழித்துள்ள தொகை எவ்வளவு? இந்தத் திட்டத்தினை மூன்று பகுதிகளாகப் பிரித்து வேலை செய்கிறார்கள்; ஒவ்வொரு திட்டத்திற்கும் ஆகின்ற செலவு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை மூன்று கட்டங்களிலே அரசாங்கம் நிறைவேற்றி இருக்கின்றது. முதல் கட்டத்திலே ரூ. 1,430 இலட்சங்கள், 2-வது கட்டத்திற்கு ரூ. 324 இலட்சங்கள்; 3-வது கட்டத்திற்கு 743.5 இலட்சங்களையும் இந்த அரசாங்கம் செலவழித்திருக்கிறது.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு ஹெக்டேர் நிலம் சாகுபடி செய்வதற்கு இந்தத் திட்டத்தின் மூலம் குறியீடு வைத்துள்ளீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கு கட்டங்களும் முடிந்த பிறகு இந்தத் திட்டத்தின் மூலமாக 1,72,401 ஹெக்டேர் நிலங்களை பாசனத்திற்குக் கொண்டு வரவேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, பரம்பிக்குளம், ஆளியாறு திட்டத்தின்படி, புஞ்சைப் பாசனமாக அதிகப்படியாக பாசனம் கொடுக்கக் கூடிய எல்லையை முதலில் நிர்ணயித்ததிலிருந்து இதுவரைக்கும் அதிகப்படுத்தி கொடுத்திருக்கும்படியான பகுதி எவ்வளவு இருக்கும்? அப்படிச் செய்ததின் விளைவாக இரண்டு ஆண்டுகள் அல்லது மூன்று ஆண்டுகள்

வரைக்கும்கூட சில பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுக்கப்பட முடியாமல் கஷ்டம் ஏற்பட்டு விவசாயிகளுக்கு நஷ்டமும் ஏற்பட்டு வருகிறது உண்மையா? அப்படியானால், முறையான பாசனத் திட்டமாக எவ்வளவு ஏக்கருக்கு அதைக் கொடுக்க முடியும் என்பதை அரசு பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக தற்போது 18 மாதங்களுக்கு ஒரு முறை பாசனத்திற்கு நாங்கள் தண்ணீர் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இப்போது திட்டம் முடிவுறுகின்ற நேரத்தில் அதிகப்படியான ஹெக்டேர் நிலங்களை பாசனத்திற்கு எடுத்துக் கொள்ளும்போது, அது நஞ்சையிலிருந்து புஞ்சைப் பாசனமாக வருகிற நேரத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை கொடுக்க வேண்டிய காலகட்டம் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பல பகுதிகளிலே கொஞ்சம், கொஞ்சமாக நஞ்சையிலிருந்து புஞ்சையாக்கி இருக்கிறார்கள். மொத்தமான கணக்கு இப்போது இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பகுதி வாரியாக பதில் சொல்லப்படும்.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம், ஆளியாறு திட்டத்தின்கீழ் திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்டிருக்கிற ஏழு பஞ்சாயத்துக்களில் வெட்டப்பட்டிருக்கின்ற அந்தக் கால்வாயில் இதுவரையிலும் தண்ணீர் விடப்படவில்லை. ஏறத்தாழ 5 ஆண்டுக்காலம் ஆகியும்கூட, இதுவரை ஒரு முறைகூட பாசனத்திற்கென்று தண்ணீர் விடப்படவில்லை. ஆகவே, எப்போது தண்ணீர் விடப்படும் என்பதை அறிவதோடு, இறுதியாக பல்லடம் தாலுகாவினுடைய கடைசிப் பகுதியாக இருக்கக்கூடிய முதலிபாளையம் என்ற கிராமம் மட்டும் இந்தத் திட்டத்தில் விடப்பட்டிருக்கிறது. நெடுங்காலமாக முதலிபாளையத்தைச் சேர்ந்தவர்கள் இந்தத் திட்டத்தை, அந்தப் பஞ்சாயத்திற்கும் நீட்டிக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஆகவே, காங்கேயம் ரோட்டுக்கு அடுத்து இருக்கக்கூடிய முதலிபாளையம் கிராமத்திற்கும் பி.ஏ.பி. திட்டம் விஸ்தரிக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனித்தனி ஊர்களாக இருக்கின்ற ஊர்களுக்கு எல்லாம் திட்டம் இருக்கிறதா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். அந்த ஊர்களின் பெயரைச் சொல்லி, இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படுமா என்று தனிக் கேள்வி கேட்டால், அதற்குச் சரியான பதில் சொல்லப்படும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம், ஆளியாறு திட்டத்தில் கேரளாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், மேலும் கேரளா விலிருந்து பெறவேண்டிய நீரை நாம் நம் பகுதிக்கு எடுத்துக் கொள்ளவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, கேரளாவி லிருந்து இன்னும் நாம் எடுத்துக் கொள்ளவேண்டிய நீர், ஒப் பந்தப்படி இருக்கிறதா? அப்படி இருந்தால், அதை நாம் பெறு வதற்கான முயற்சி எடுத்திருக்கிறோமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 32 டி.எம்.சி. தண்ணீர் ஒப்பந்தப்படி நமக்கு வந்தாகவேண்டும். இப்போது அந்தப் பகுதியில் சரியான மழை இல்லாத காரணத்தால், 28 டி.எம்.சி. யிலிருந்து 30 டி.எம்.சி. வரைதான் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, குறைவான தண்ணீர்தான் அங்கு வந்துகொண்டிருக்கிறது.

காட்டுமன்னார்கோயில் வட்டம் வீராணம் ஏரியை ஆழப்படுத்தல்.

39—(* வினா எண். 9405) திரு. சா. ஜெயச்சந்திரன், திரு. கே. ஆர். கணபதி, திரு. ஏ. தங்கராசு, மற்றும் திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) காட்டுமன்னார் கோயில் வட்டம் வீராணம் ஏரியை ஆழப்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) வீராணம் ஏரியில் தூர் வாரி அதனுடைய கொள் ளளவை பழைய நிலைக்குக் கொண்டுவர மதிப்பீடு தயாரிக்கப் பட்டு வருகிறது.

திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வீராணம் ஏரியை ஆழப்படுத்துவதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருவதாகக் கூறியுள்ளார்கள். அந்த மதிப்பீட்டினுடைய தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவ்ர் அவர்களே, ஒரு பகுதிக்கு சுமார் 50 லட்சம் ரூபாய் செலவிலே அதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS